

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி 28வது வார்டு, மூலக்கடை மற்றும் மாதவரம் அன்புத் தளபதி ஆட்டோ நிறுத்தத்தில், சென்னை பெருநகர் ஆட்டோ ஓட்டுநர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நடைபெற்ற விழாவில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி வாழ்த்தினார். மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற தலைவர் டி.ஆர்.ரவீந்திரகுமார் ஏற்பாட்டில், எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி., டி.ஆர்.செங்குட்டுவன், ஆ.சசிகுமார், பி.மணிகண்டன், இ.ஏஞ்சல், எஸ்.ராஜி, சி.நந்தா, வயலட் மோகன், இ.விவேக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### பிகார் தேர்தலுடன் ஜம்மு - காஷ்மீர்,

# 6 மாநிலங்களில் இடைத்தேர்தல்!

புதுடெல்லி,அக்.7-

பிகார் மாநில தேர்தலுடன் ஜம்மு - காஷ்மீரிலும் ஒடிஸா, ஜார்க்கண்ட், தெலங்கானா, ராஜஸ்தான், பஞ்சாப், மிஸோரம் ஆகிய 6 மாநிலங்களிலும் இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் நேற்று (அக். 6) அறிவித்தது. அதன்படி, நவம்பர் 6, 11 ஆகிய தேதிகளில் மொத்தம் இரண்டு கட்டங்களாக பிகாரில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஜம்மு - காஷ்மீர், 6 மாநில இடைத்தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்கண்ட மாநிலங்களில் காலியாக உள்ள மொத்தம் 8 தொகுதிகளுக்கும் நவ. 11-இல் வாக்குப்பதிவு நடைபெறும். வாக்கு எண்ணிக்கை நவ. 14-இல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் அனிஷா லாஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் அலுவலகத்தை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். அருகில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஒன்றிய செயலாளர் டி.முரளி கிருஷ்ணன், திருவள்ளூர் முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பர்கத்துல்லாகான், உரிமையாளர்கள் டி.சர்தார், டி.ஜாகீர் உசேன், டி.முஹம்மது ராஃபி, நிர்வாகிகள் ஜி.பாஸ்கர், டி.பாஸ்கர், டி.மனோகர், கபிலன், ஜி.சங்கர், உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ் ஆர்வலர்

# சிங்கப்பூர் போப்ராஜ் மறைவு!

## தமிழ் அமைப்புகள் சார்பில் அஞ்சலி!

சிங்கப்பூர், அக். 7-

சிங்கப்பூரில் பல தமிழ் அமைப்புகளுக்கு நிதி ஆதரவு தந்து வந்த புரவலாராகவும், திமுக மாநில இலக்கிய அணியின் புரவலராகவும் இருந்த போப்ராஜ் என்றழைக்கப்பட்ட நாகை.தங்கராஜ் அவர்கள் 5அக்டோபர்2025 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிங்கப்பூரில் பல்வேறு தமிழ் கவிதை மற்றும் இலக்கிய நூல்கள் வெளியிடுவதற்கும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் நிதி ஆதரவு வழங்கி வந்தது மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பல அறச்செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

பயண முகவராகப் பணியாற்றிப் பின் சொந்தமாக ஜோஸ்கோ பயண நிறுவ



னத்தை கட்டியெழுப்பி வெற்றிகரமாக நடத்தி வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் தீராப் பற்றுக் கொண்டவர். தி.மு.க இலக்கிய அணியின் முன்னாள் மா நிலத் தலைவர் தஞ்சைக் கூத்தரசன் அவர்களோடு நெருங்கிய நண்பராக இருந்தார். தி.மு.க இலக்கிய அணியின் சார்பில் அறிவாலயத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 86 ஆவது பிறந்தநாள் விழா ஒன்றில், போப்ராஜ் அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றி இருக்கிறார்.

சென்ற ஆண்டு சிங்கப்பூரில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் கலைஞர் நூற்றாண்டு விழாவை “கலைஞர் இலக்கியம் என்ற கருதரங்கமாக நடத்தியபோது, அந்த நிகழ்வுக்குத் தலைமை ஏற்றதுடன், அந்த நிகழ்வின் முழுச் செலவையும் ஏற்றுக் கொண்ட, அவரின் அன்பை மதிப்புடன் நினைத்து அஞ்சலி செலுத்துகிறோம்.

இழப்பில் வாடும் நாகை தங்கராஜு அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் அறிவித்துள்ளனர்.

### பொதுத்துறை ஊழியர்களுக்கு போனஸ் –

# கருணைத் தொகை வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, அக்.7-

தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி என்ற நோக்கோடு செயல்பட்டு வரும் நமது தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்த வளர்ச்சிக்கு காரணமான தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று ஊதிய ஒப்பந்தங்களை நிறைவேற்றி வருவதுடன், அவ்வப்போது குறைந்தபட்ச ஊதியத்தை மறுசீரமைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு, அதற்கான அரசாணைகளை வெளியிட்டு வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு தொழில் அமைதி இன்றியமையாதது என்ற சிந்தனையோட்டத்தோடு ‘திராவிட மாடல்” அரசு, தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்க



ளின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

2024 மற்றும் 2025ம் ஆண்டிற்கு போனஸ் கோரிக்கைகள் வைக்கப்பட்ட நிலையில் அனைத்துத் தரப்பு தொழிலாளர்களுக்கும் மனநிறைவு தரக்கூடிய வகையில், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை என 20 சதவிகித போனஸ் அறிவித்தமைக்கும், இலாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரிபவர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் 1.67 சதவிகித கருணைத் தொகை என 10 சதவிகித போனஸ் வழங்கவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களுக்கு ரூ. 3000/- கருணைத் தொகை வழங்க உத்தரவிட்டமைக்கும்,

பல்வேறு கூட்டுறவு அமைப்பு மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிட்ட முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தொழிலாளர் முன்னேற்றச் சங்க பேரவை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் முழக்கமான ‘வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு” என்பதை உறுதிப்படுத்த களப்பணியாற்றுவோம் என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆலந்தூர் - 156வது வட்டக் கழகச் செயலாளர்

# ஜெ.செல்வேந்திரன் எம்.சி.யின் தந்தை த.ஜெயவேல் மறைவு!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் - கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம், அக்.7-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்குப் பகுதி, 156 வது வட்டக் கழகச் செயலாளர் - மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரனின் தந்தை த.ஜெயவேல் (வயது 78) நேற்று (6.10.2025 திங்கள்கிழமை) இரவு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவுச் செய்தி அறிந்ததும் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் தா.மோ.



அன்பரசன் அன்னாரது உடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மகளிர் அணி உள்ளிட்ட பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (7.10.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் எண்.V 354, மாரியம்மன் கோவில் தெரு, முகலிவாக்கத்திலிருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் போரூரின் மயான சுடுகாட்டில் நடைபெறுகின்றன.

### சென்னை மெரினா கடற்கரையில்

# கடலில் எண்ணெய் அகற்றுவதற்கான மாதிரி பயிற்சி!

## தேசிய மாசு கட்டுப்பாட்டு தினத்தை முன்னிட்டு நடைபெற்றது!

சென்னை, அக்.7-

தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் கடலில் எண்ணெய் கசிவு ஏற்படும் நிகழ்வுகளில் கரையோரத்தில் எண்ணெய் அகற்றுவதற்கான மாதிரி பயிற்சி நேற்று (06.10.2025) நடைபெற்றது.

தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, நேற்று (06.10.2025) சென்னை மெரினா கடற்கரையில் இந்திய கடலோர காவல் படை, பெருநகர சென்னை மாநகராட்சி, மாநில பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தீயணைப்புத்துறை, மீன்வளத்துறை, சென்னை துறைமுக நிர்வாகம், எண்ணெய் தொழில் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பார்வையாளர்களுடன் ஒருங்கிணைந்து, கடலில் எண்ணெய் கசிவு ஏற்படும் நிகழ்வுகளில் கரையோரத்தில் எண்ணெய் அகற்றுவதற்கான மாதிரி பயிற்சி இந்திய கடலோர காவல்படை பொது இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி அலுவலர்களின் தலைமையில் 200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், PPE கருவிகளுடன் கரையோர மீட்புப் பணியில் பங்கேற்றனர்.



நேற்று (06.10.2025) காலையில் நடைபெற்ற கடல்சார் பயிற்சியில், இரண்டு கப்பல்களின் மோதல் சம்பவம் மாதிரியாக அமைக்கப்பட்டு, எண்ணெய் கசிவு நிகழ்த்தப்பட்டு, கடலோர காவல்படை கப்பல்கள், மாசுக் கட்டுப்பாட்டு படகுகள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி எண்ணெய் கட்டுப்படுத்தும் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக தடுப்பு திரைகள், எண்ணெய் உறிஞ்சும் கருவிகள், இரசாயனத் தடுப்புகள் போன்றவை பயன்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, மாலையில் நடைபெற்ற கரையோர / கடற்கரைப் பயிற்சியில் எண்ணெய் கசிவு கடற்கரையை அடைந்ததாகக் கருதப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநில துறைகள் கடலோர காவல்படையுடன் இணைந்து கரையோரத்தில் எண்ணெய் நீக்கும் மாதிரி செயலை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் இந்தப் பகுதிகளில் மண்தடுப்பு, திரை, தடுப்பு குழாய்கள் அமைத்து தடுப்பு நடவடிக்கைகள், உறிஞ்சல், தோண்டுதல், சுத்திகரிப்பு உபகரணங்கள் மூலம் எண்ணெய் சேகரிப்பு நடவடிக்கைகள், சுத்திகரிப்பு / இயற்கை நிலையை மீட்டல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி பெற்ற முறையில் கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட நிலைகளில் எண்ணெய் கசிவு அகற்றும் நிலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டம், இந்திய கடலோர காவல்படை தேசிய அளவில் மேற்கொண்டு வரும் NATPOLREX (National Oil Spill Disaster Contingency Plan) மாதிரி பயிற்சியின் அடிப்படையில் நடைபெற்றது. இது பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு திறனையும் நடவடிக்கையினை வேகத்தையும் பரிசோதிக்கும் வகையில் அமைந்தது.

இந்த மாதிரி பயிற்சியானது MARPOL (International Convention for the Prevention of Pollution from Ships), OPRC Convention (Oil Pollution Preparedness, Response and Cooperation), IMO (International Maritime Organization) நடைமுறைகள் ஆகிய சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஐ.நா வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நடைபெற்றது.

அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்பை பரிசோதித்தல், கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு உபகரணங்களின் செயல்திறனை மதிப்பிடுதல், எண்ணெய் கசிவு சம்பவத்தின் பல்வேறு நிலைகளிலும் தகுந்த நடவடிக்கையை முன்னெடுத்து காட்டுதல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை இந்தப் பயிற்சியின் முக்கிய இலக்குகள் ஆகும்

இந்த மாதிரி பயிற்சியின் மொத்த பொறுப்பாக இந்திய கடலோர காவல்படையின் பொது இயக்குநர் அவர்களும், கடல்சார் நடவடிக்கைகளை இந்திய கடலோர காவல்படையும், கரையோர நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சி, மற்றும் மாநில பேரிடர் மேலாண்மைத் துறை இணைந்து, கடலோர காவல்படையுடன் ஒருங்கிணைந்தும் செயல்படுத்தியது. மேலும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, சென்னை துறைமுக நிர்வாகம், தீயணைப்புத்துறை, மீன்வளத் துறை, கப்பல் / எண்ணெய் கையாளும் நிறுவனங்கள், கடற்படை, விமானப்படை, சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் நிபுணர்கள் உள்ளிட்ட மற்ற துறைகளும் இணைந்து செயல்பட்டன.

இந்த மாதிரி பயிற்சியில் எண்ணெய் மற்றும் எண்ணெய் மணலை தற்காலிகமாக சேமிப்பதற்காக 60 டிரம்கள், 60 சின்டெக்ஸ் டேங்க்ஸ், அப்புறப்படுத்துவதற்காக 2 ஜே.சி.பி. வாகனங்கள், 2 பாப்காட் வாகனங்கள், 5 எச்.பி. திறன் கொண்ட 2 மோட்டார் பம்புகள், 2 டிராக்டர்கள், 50 மண்வெட்டிகள், 25 எச்.டி. பைகள், 10 Segregation Wing Units, கட்டுப்பாட்டு அறை, படுக்கைகளுடன் கூடிய முதலுதவி மையம், நெபுலைசர், தையல் பொருட்கள் மற்றும் தயார் நிலையில் ஆம்புலன்ஸ் வாகனம், அதிக கழிவுகளை அகற்றுவதற்காக ஹூக் பின் மற்றும் 300 மீட்டர் கயிற்றைக் கொண்ட சூப்பர் சக்கர் இயந்திரம், தண்ணீர் தொட்டிகள், கழுவும்/சுத்தப்படுத்தும் இடங்கள் மற்றும் அணுகல் பாதைகள் ஈடுபடுத்தப்பட்டது.

இந்த மாதிரி பயிற்சி பெரிய அளவிலான எண்ணெய் கசிவுகளை அகற்றுவதை நிர்வகிக்க சென்னையின் தயார்நிலையை வெற்றிகரமாக வெளிப்படுத்தியது. இது நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியது, தன்னார்வலர்களுக்கு சிறந்த நடைமுறைகளில் பயிற்சி அளித்தது, மேலும் கடற்கரை மற்றும் கடல் சூழலைப் பாதுகாப்பதில் நகரத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. சென்னையின் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்தி, சிறந்த நடைமுறைகளை உருவாக்குவதற்கு இந்தப் பயிற்சி உதவும்.

இந்நிகழ்வில் இந்திய கடலோர பாதுகாப்புப் படையின் தலைவர் (Director General ICG) பரமேஷ் சிவமணி, கிழக்கு பிராந்திய கடலோர பாதுகாப்புப் படைத் தளபதி (Regional Commander Coast Guard East) டட்விந்தர் சிங் சைனி, கடலோர காவல் படையின் மண்டல மீன்வளம் மற்றும் சுற்றுச்சூழல் அலுவலர் (கிழக்கு)( RFEO CGRHQ (E)) எஸ். பிரேம் குமார், தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச். ஆர். கௌஷிக் மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் 30க்கும் மேற்பட்ட நாடுகளின் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58க்குட்பட்ட புரசைவாக்கம், டவுட்டன் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதியை ஏற்படுத்தி, அம்மேம்பாலத்தை அழகூட்டும் பணிகள் நடந்துவருவதை ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5இன் மண்டல அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் சிறப்புத் திட்ட அலுவலர் ஆகியோர் உடனிருந்தனர்.



தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி 59வது வட்ட தி.மு.க சார்பில் கழக செயற்குழு கூட்டம் அவை தலைவர் எஸ். கோபாலகிருஷ்ணன் தலைமையில், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பிரிதிவிராஜ் எம்.சி. கலந்து கொண்டு எதிர்கொள்ள இருக்கின்ற 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் பகுதி கழக செயலாளர் சேகர், எஸ்.ஆர். சங்கர், திருமதி.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., கே.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் பரமத்தி வேலூர் பேரூர் பகுதியில் புதிதாகக் நியமிக்கபடவுள்ள இளைஞர் அணி பணிகள் குறித்து நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மூர்த்தி தலைமையில் சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ‘டாண்டி’ பிரகாஷ் ஆய்வு மேற்கொண்டார். இதில் முருகன், நாவலடி ராஜா, சுந்தர், மணிகண்டன், தினேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.